# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 23 வெள்ளிக்கிழமை 07.03.2025 கதிர் 146



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# அரசின் பங்காளிகளாக மாற வேண்டும் தமிழ்ப் பிரதிநிதிகளிடம் மதன் வலியுறுத்து



யாழ்ப்பாணம், மார்ச் 07

இலங்கை அரசிடம் பேரம் பேசும் சக்திகளாகத் தொடர்ந்தும் இருப்பதை விட பங்காளிகளாக மாற வேண்டும் என்று ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ப.மதனவாசன் வலியுறுத்தினார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கிளிநொச்சி மாவட்ட பிரதம அமைப்பாளராக நான் நியமிக்கப்பட்டிருக்கின்றேன். கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்‌ஷவினால் இந்த நியமனம் எனக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஒரு தூர நோக்குடன் பயணிக்க வேண்டிய தேவை தமிழ்ச் சமூகத்துக்குத் தற்போது இருக்கும் காரணத்தால் இந்த நியமனத்தை நான் ஏற்றுக் கொண்டிருக்கின்றேன்.

பேரம் பேசும் சக்திகளாகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோருக்கும் இருக்கின்றது. எமது கட்சி இந்தப் பேரம் பேசும் சக்தி எனும் விடயத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக அந்த ஆட்சியின் பங்காளர்களாகத்

7➤

# கல்வித்துறை நெருக்கடிகளுக்கு அரசியல் தலைவீடுகளும் காரணம்

## பிரதமர் ஹரிணி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 07

கல்வித்துறையில் உருவாகியுள்ள பல நெருக்கடிகளுக்கு கல்விக் கொள்கைகள் முறையாக அமுல்படுத்தாமையும் அரசியல் தலையீடுகளுமே காரணம் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத் தொடரில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

7➤



# கனேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொலை வழக்கு: 9 சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு



கொழும்பு, மார்ச் 07

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த “கனேமுல்ல சஞ்சீவ” என்பவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 9 சந்தேக நபர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

7➤

# ரணில் சென்ற வழியிலேயே அநுர அரசாங்கமும் பயணம்

## இப்படிக் கூறுகின்றார் சஜித்



கொழும்பு, மார்ச் 07

தேசிய மக்கள் சக்தி அரசு, ரணிலின் தொங்கு பாலத்திலே பயணிக்கின்றது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் இன்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும்

7➤

# வவுனியாவில் 31 வயது இளம் குடும்பப் பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குடும்பஸ்தர் கைது!

வவுனியா, மார்ச் 07

வவுனியாவில் 31 வயது இளம் குடும்பப் பெண் ஒருவரை மிரட்டி பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் 37 வயது குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பம்பைமடு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 31 வயது குடும்பப் பெண் ஒருவரை 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம்

7➤




# ஒரு வயது குழந்தை பரிதாப உயிரிழப்பு



புத்தளம், மார்ச் 07

புத்தளம் மாவட்டம், ஆராய்ச்சிக்கட்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வைரம்கட்டுவ பகுதியில் உள்ள வீடொன்றுக்கு அருகில் தோண்டப்பட்ட நீர்

7➤

# உரத்தை தட்டுப்பாடின்றி வழங்க தீர்மானம்



கொழும்பு, மார்ச் 07

எதிர்வரும் சிறுபோகத்தின் போது வயல் நிலங்களுக்குத் தேவையான உரத்தைத் தட்டுப்பாடின்றி தொடர்ச்சியாக வழங்குவதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

சிறுபோகத்தின் போது பயிர்ச்செய்கைகளை ஆரம்பிப்பதற்காக வயல்நிலங்களுக்குத் தேவையான உரத்தைத் தட்டுப்பாடின்றி தொடர்ச்சியாக வழங்குவதன் அவசியத்தை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

சிறு போகத்திற்கு அவசியமான உர விநி-யோகம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சிறு போக நெற்பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான உரம் தொடர்பில் ஆராயப்பட்டது .

தடையின்றி விவசாயிகளுக்கு சிறு போக பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்த கலந்துரையாடலில், விவசாய, கால்நடை,காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ லால்காந்த, காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் வைத்தியர் சுசில் ரணசிங்க, ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்க, விவசாய, கால்நடை,காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டீ.பீ. விக்ரமசிங்க, ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் கபில ஜனக பண்டார, விவசாய தொழில்நுட்ப பிரிவு பணிப்பாளர் நாயகம் ஆர்.டீ.சித்ராநயனா, கமநல சேவை ஆணையாளர் நாயகம் யூ.பீ. ரோஹன ராஜபக்ஷ, தேசிய பசளை செயலக அலுவலக பணிப்பாளர் சந்தன லொகுஹேவகே மற்றும் விவசாய, கால்நடை,காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நிதி அமைச்சு என்பவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள், தனியார் துறை பசளை விநியோக நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

# ஈஸ்டர் சூத்திரதாரியை எனக்கு தெரியும்: ஞானசார தேரர்



கொழும்பு, மார்ச் 07

2019 ஈஸ்டர் தாக்குதல்களுக்கு பின்னால் ஒரு மூளை இருப்ப-தாகவும், அவர் தொடர்பில் தனக்குத் தெரியும் என்று கலகொட அத்தே ஞானசார தேரர் கூறினார்.

கண்டி தலதா மாளிகையில் ஆசீர்வாதம் பெற்று, மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே தேரர் இவ்வாறு "இங்கே ஒரு மூளையாக இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். நீங்கள் இப்போது மூளையாக இருப்பவர்களை தேடுகிறீர்களா? மூளையாக இருந்தவரை எனக்கு தெரியும் என்று நான் பொறுப்புடன் சொல்ல முடியும். ஆனால் நான் ஊடகங்களுக்கு சொல்ல மாட்டேன்."

நாட்டின் ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு பொறுப்பில் உள்ளவர்களு-க்கும் சொல்லுமாறு ஒரு ஊடகம் சொல்கிறது. ஒரு சூத்திரதாரி இருக்கிறான். எனக்குத் தெரியும், சூத்திரதாரி ரகசியம் தெரிந்து விட்டது. மூளையாக செயல்பட்டவருக்கு அவர் எங்கிருந்தார் என்பது தெரியும். மூளையாக செயல்பட்டவரைச் சுற்றி இருந்-தவர்களுக்கு தெரியும். சஹ்ரானுக்கு எப்படி பயிற்சி அளிப்பது என்பது மூளையாக செயல்பட்ட அவருக்குத் தெரியும். அவர் தற்கொலைக்கு எப்படி வழிநடத்தப்பட்டார் என்பது எனக்குத் தெரியும் என்றார்..

" அவர்களின் பெயர்கள் மற்றும் குடும்ப பெயர்களை சம்பந்-தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்வேன் எனினும், அப்புஹாமி மற்றும் கருணாவதியிடம் சொல்வதில் பயனில்லை" என்றார். (ஐ)



# சர்வதேச ஊடக நேர்காணல் குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் அதிருப்தி



கொழும்பு, மார்ச் 07

அல் ஜசீரா நேர்காணல் குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிருப்தி தெரிவித்துள்ளார். நேர்காணல் ஒளிபரப்பான சிறிது நேரத்திலேயே ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரணில் விக்ரமசிங்க, தொகுப்பாளர் மெஹ்தி ஹசனுடன் இணைந்த மூன்று குழு உறுப்பினர்களில் இருவர் விடுதலைப் புலிகள் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறினார்.

"மனித உரிமைகள் வழக்கறிஞரும் இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் முன்னாள் ஆணையருமான அம்பிகா சத்குணநாதன் இந்த விவாதத்தில் பங்கேற்பார் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

ங்கள் சித்தாந்த வேறுபாடுகள் இருந்தபோதிலும், நான் அவரை அறிந்திருப்பதால், அதில் நான் மகிழ்ச்சியடைந்தேன். இருப்பினும், பினனர் அவருக்குப் பதிலாக விடுதலைப் புலிகள் ஆதரவு குழுக்களுடன் தொடர்பு கொண்ட இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதை அறிந்தேன்," என்று கூறினார்.

நேர்காணலின் வடிவத்தையும் அவர் விமர்சித்தார், அவரது பதில்களின் முக்கிய பகுதிகள் தவிர்க்கப்பட்டதாகக் குற்றம் சாட்டினார். "நான் உள்ளூர் ஊடகங்களுடன் பேசும்போது, அது நேரடியாக ஒளிபரப்பப்படுகிறது, எனவே நல்லது கெட்டது இரண்டும் வெளிவரும்.

இருப்பினும், அல் ஜசீரா இரண்டு மணி நேரம் என்னை நேர்காணல் செய்தது, ஆனால் ஒரு மணி நேர பகுதியை மட்டுமே வெளியிட்டது, அதில் பெரும்பகுதியைத் திருத்தியது" என்று அவர் கூறினார். (ஐ)

# நாடாளுமன்றத்தில் பொய் கூறும் சாணக்கியன்:



கொழும்பு, மார்ச் 07

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அண்மைக்காலமாக சபையில் தெரிவித்தவை யாவும் அப்பட்டமான பொய்கள் என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குமாரசாமி புஸ்பகுமார் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஊடக மையத்தில் நேற்று(06) மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவைக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் நாடாளுமன்றத்தில் அண்மையில் தெரிவித்த கருத்தை மறுக்கின்றேன்.

அவருக்கு நாடாளுமன்ற சிறப்பு உரிமை இருக்கிறது என்பதற்காக மற்றவரின் சுய கௌரவத்தை உரிமையை இழுக்கும் உரிமை அவருக்கு இல்லை. பிள்ளையானின் சகா நான் என குறிப்பிட்டிருக்கிறார். அது மாத்திரமல்ல நான் கொழும்பு ஹில்டன் ஹோட்டலுக்கு சென்றதாக பச்சைப் பொய் சொல்லியிருக்கிறார். கடந்த இரண்டு வாரங்களில் நான் கொழும்பு செல்லவே இல்லை. எனது சாரதி சுதா என்று சொல்கின்றார். முடிந்தால் அந்த சுதாவை காட்டுமாறு சவால் விடுகின்றேன்.

எனவே தான் நாடாளுமன்றத்தில் பச்சைப் பொய் சொல்லி மக்களை ஏமாற்றி வருகின்ற அவரின் இந்த சித்து விளையாட்டுகளை இனியாவது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவ்விடயம் தொடர்பாக பொலிஸ் மா அதிபரிடம் நான் முறைப்பாடு ஒன்றை வழங்கவுள்ளேன். என் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியுமாக இருந்தால் அவர் இவ்வாறான ஊடக மாநாட்டை நடத்தி பகிரங்கமாக நேருக்கு நேர் கூறட்டும் என சவால் விடுகின்றேன்" எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# இலங்கையில் அதிகூடிய சிறுவயது கர்ப்பம்!

கொழும்பு, மார்ச் 07

இலங்கையில் பாடசாலை செல்லும் சிறுமிகள் கர்ப்பமடைவது தொடர்பாக வெளிவரும் தகவல்கள் காரணமாக அதிகாரிகள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

சமூக வலைத்தள பாவனை அதிகரிப்பின் பின்னர் இலங்கையில் சிறுவயதுக்கர்ப்பங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன் பிரகாரம் கடந்த 2023ஆம் ஆண்டு 163 பாடசாலை மாணவிகள் கர்ப்பம் அடைந்திருந்த நிலையில், 2024ஆம்ஆண்டு அந்த எண்ணிக்கையானது 213 வரை அதிகரித்துள்ளது.

பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் மீதான அத்துமீறல் விசாரணை பிரிவின் தரவுகள் இதனைத் தெரிவிக்கின்றன.

2024ஆம் ஆண்டு பதிவான குழந்தைத் தாய்மார்களுக்கு மத்தியில், 10 வயதான சிறுமி ஒருவரும் உள்ளடங்கியிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

அதிகாரப்பூர்வமாக பதிவாகியுள்ள குழந்தைத் தாய்மார்களை விடவும், அதிக எண்ணிக்கையிலான குழந்தைத் தாய்மார்கள் இலங்கையில் இருக்கக்கூடும் என்றும் கூறப்படுகின்றது.

நாட்டில் தற்போது பதிவாகின்ற சில சம்பவங்களில், கர்ப்பத்திற்குப் பொறுப்பு கூற வேண்டிய ஆண்கள், 18 வயதுக்கு குறைவான சிறுவர்கள் எனவும் அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளது.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறுவர் அத்துமீறல் சம்பவங்கள் அதிகரித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு வெளியிட்டுள்ள புள்ளிவிபரம் ஒன்றில் இந்தத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சிறுவர் அத்துமீறல் அதிகம் இடம்பெற்ற பிரதேசங்களாக வாகரை,மண்முனை வடக்கு மற்றும் கிரான் போன்ற பிரதேசங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ)

# புற்றுநோய் சிகிச்சை தொடர்பில் வடக்கில் விசேட நடவடிக்கை




கொழும்பு, மார்ச் 07

இலங்கையின் வடக்கு பகுதியை வதிவிடமாக புற்றுநோயாளர்கள் சிகிச்சைக்காக கொழும்புக்கு சென்று மருத்துவ நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில், தற்போது தெல்லிப்பளை வைத்தியசாலையில் அதற்கான சிகிச்சை வழங்கப்படும் என தெரிவிக்கப்படடுள்ளது.

முன்னதாக சிகிச்சைக்கு சென்று வருகையில் தமது நலிவுத் தன்மை காரணமாகவும் அல்லது பிரயாணக் கஷ்டம் மற்றும் பணவசதிக் குறைவு காரணமாகவும் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு சிகிச்சையைத் தொடர்வதற்காக கோரிக்கைகள் முன்வைககப்பட்டிருந்தன.

தமது விருப்பில் சிகிச்சையைத் தொடர தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு செல்லுகையில் அங்கு சிகிச்சை மறுக்கப்பட்டமை தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களும் எழுந்திருந்தன.

குறித்த விடயம் தொடர்பில் புற்றுநோயாளர்கள், மனித உரிமை ஆணைக்குழு மற்றும் சுகாதார அமைச்சு, வெகுஜன ஊடகங்களூடாகவும் முறைப்பாடுகளை முன்வைத்து கடந்த ஒரு வருடமாக தீர்வுக்காக காத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்று புற்றுநோயாளர்களின் நலன்கள் பூரணமாக பேணப்படும் முறையிலான முடிவுகள் எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கமைய புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கொழும்பில் சிகிச்சை பெற்று வருகையில் நோயாளர்கள் தமது சிகிச்சையை யாழில் தொடர விரும்பு மிடத்து தாம் பெற்ற சிகிச்சை தொடர்பான சகல விபரங்களையும் கடிதத்துடன் எடுத்து சென்று, தெல்லிப்பளையில் அங்கு உள்ள மருத்துவ மற்றும் கதிர்வீச்சு வசதிகளுடன் அங்கு சேவையாற்றும் புற்றுநோய் நிபுணர்களின் தீர்மானத்துடன் சிகிச்சை வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் எவ்வித காரணத்துக்காகவும் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் எனவும் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 4.6 கோடி பேருக்கு ஒரே ஆண்டில் வேலை



'பட்ஜெட் குறித்த, 'ஆன் லைன்' கருத்தரங்கில் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்ட வியா நேற்று பேசியதாவது:

கடந்த 2017 - -18ல் 6 சதவீதமாக இருந்த வேலையின்மை விகிதம், 2023- - 24ல் 3.2 சதவீதமாகக் குறைந்துள்ளது, இதே காலகட்டத்தில் வேலைவாய்ப்பு பெற்ற பெண்களின் எண்ணிக்கை 22 சதவீதத்திலிருந்து 40.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. கலை பொருட்கள் விலை 2024ல் 18 சதவிகிதம் வரை வீழ்ச்சி

கடந்த. 2014 - 24 வரையிலான 10 ஆண்டுகளில் நாட்டில் 17.1 கோடி பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். கடந்த ஆண்டில் மட்டும். 4.6 கோடி வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

வருங்கால வைப்பு நிதி, ஒய்வூதியம், தொழிலாளர் மருத்துவக் காப்பீடு போன்ற சமூக பாதுகாப்பு பெறுவோர் எண்ணிக்கை, 24.4 சதவீதத்தில் இருந்து, 48.8 சதவீதமாக உயர்ந்துள்ளது.இவ்வாறு அவர் பேசினார். (ஐ)



# எல் அண்ட் டி பெண் ஊழியர்களுக்கு ஒரு நாள் மாதவிடாய் விடுமுறை

பிரபல நிறுவனமான எல் அண்ட் டியில் பணியாற்றும் பெண்களுக்கு ஒருநாள் மாதவிடாய் விடுமுறை வழங்கப்படும் என்று அந்நிறுவனத்தின் தலைவர் சுப்ரமணியன் அறிவித்துள்ளார்.

நாட்டின் முன்னணி தொழில் நிறுவனம் எல் அண்ட் டி, இன்ஜினியரிங், கட்டுமானம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் 5 ஆயிரம் பெண்கள் உள்பட மொத்தம் 60 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், மார்ச் 8ம் தேதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில், தனது நிறுவனத்தில் பணிபுரியும் பெண்களுக்கு மாதத்தில் ஒருநாள் மாதவிடாய் விடுமுறை அளிப்பதாக எல் அண்ட் டி நிறுவனத்தின் தலைவர் சுப்ரமணியன் அறிவித்துள்ளார்.

அண்மையில் உலகின் முன்னணி நாடாக நாம் வளர வேண்டுமெனில் வாரத்திற்கு 90 மணிநேரம் வேலை செய்ய வேண்டும் என்று சுப்ரமணியன் கூறியிருந்த நிலையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விடுமுறையானது முதற்கட்டமாக இன்ஜினியரிங் மற்றும் கட்டுமான துறைகளில் இருக்கும் பெண்களுக்கு பொருந்தும் என்றும், விரைவில் இது நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஒடிசா பள்ளி கட்டடங்களின் நிறம் ஆரஞ்சுக்கு மாற்ற பா.ஜ., உத்தரவு எதிர்க்கட்சி கடும் எதிர்ப்பு



ஒடிசாவில் அனைத்து பள்ளி கட்டடங்களின் நிறத்தையும், ஆரஞ்ச் வண்ணத்திற்கு மாற்றும் ஆளும் பா.ஜ., அரசின் உத்தரவுக்கு, எதிர்க்கட்சியான பிஜு ஜனதா தளம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

ஒடிசாவில் பா.ஜ.,வைச் சேர்ந்த மோகன் சரண் மஜி முதல்வராக உள்ளார். அந்த மாநிலத்தில், 24 ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த நவீன் பட்நாயக் தலைமையிலான பிஜு/ ஜனதா தளம் கட்சியை வீட்டுக்கு அனுப்பி விட்டு, கடந்த ஆண்டு முதல் பா.ஜ., ஆட்சியில் அமர்ந்துள்ளது.

இந்நிலையில், சமீபத்தில் பள்ளி கட்டடங்களை ஆரஞ்ச் நிறத்திற்கு மாற்ற வேண்டும் என, அந்த மாநில அரசு, அனைத்து மாநில கலெக்டர்களுக்கும் உத்தரவிட்டுள்ளது.

அதை எதிர்த்து, பிஜு ஜனதா தளத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான பிரசன்ன ஆச்சார்யா நேற்று கூறியதாவது: ஆளும் பா.ஜ.,வின் செயல் கடும் கண்டனத்துக்கு உரியது. பள்ளி கட்டடங்களின் நிறத்தை மாற்றுவதால், பள்ளி மாணவர்களின் நிலைமை மாறிவிடப் போகிறதா் இதில் என்ன அர்த்தம் இருக்கிறது. அல்லது பள்ளி மாணவர்களுக்கு புதிய உற்சாகம் பிறந்து விடப் போகிறதா? (ஐ)




# 'வாட்ஸாப்' வாயிலாக சேவைகள் ஆந்திராவில் 200ஐ எட்டியது

ஆந்திராவில், 'வாட்ஸாப்' வாயிலாக வழங்கப்படும், 'மனா மித்ரா' திட்டத்தின் கீழ், 200 சேவைகள் வழங்கப்பட்டுள்ளன' என, அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஆந்திராவில், சமீபத்தில் மனா மித்ரா என்னும் திட்டம் துவங்கப்பட்டது. அதன்படி, 9552300009 என்ற வாட்ஸாப் எண் அறிமுகப்படுத்தப்பட்டு, அதன் வாயிலாக மாநிலம் முழுதும் அரசின் சேவைகளை பெறலாம் என அறி விக்கப்பட்டது. தேவையான ஆவணங்களை பெறுதல், கோவில் தரிசனத்துக்கான நேரத்தை தேர்ந்தெடுத்தல், நேரில் செல்லாமலேயே அரசு அலுவலகங்களை தொடர்பு கொள்ளுதல் போன்ற சேவைகள் ,தன் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், மனா மித்ரா திட்டத்தின் வாயிலாக 200 சேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாநில தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சர் நர லோகேஷ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தன் சமூக வலைதள பக்கத்தில், ',து ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல். மனா மித்ராவின் வாட்ஸாப் நிர்வாக சேவைகள் ,ப்போது 200ஐ எட்டியுள்ளன, ,து, ஆந்திராவில் டிஜிட்டல் நிர்வாகத்தின் சக்தியை காட்டுகிறது. ஆகவே, அனைவரும் ,ந்த சேவையை பயன்படுத்துங்கள்' என, தெரிவித்துள்ளார். (ஐ)

# நீண்ட கால 'லிவ்- இன்' வாழ்க்கையை பலாத்காரம் என கூற முடியாது

'நீண்ட காலமாக, 'லிவ் இன்' எனப்படும் திருமணமின்றி சேர்ந்து வாழும் வாழ்க்கையில் இருந்த பெண், பாலியல் கொடுமைக்கு ஆளானதாக கூறுவது சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதாகும்' என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

வங்கி அதிகாரி ஒருவரும், பேராசிரியை ஒருவரும், 16 ஆண்டுகள் ஒன்றாக லிவ் -இன் உறவில்வாழ்ந்த பின், இருவருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. வேறு பெண்ணை திருமணம் செய்ய வங்கி அதிகாரி தீர்மானித்ததால், அவர் மீது பாலியல் வன்கொடுமை புகாரை பேராசிரியை அளித்தார்.

இதையடுத்து, வங்கி அதிகாரி மீது பாலியல் வழக்குப்பதிவு செய்து குற்ற நடவடிக்கை எடுக்குமாறு, கடந்த 2022ல் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் வங்கி அதிகாரி மேல்முறையீடு செய்தார். அதை விசாரித்த நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா அமர்வு, நீண்ட காலமாக லிவ் -இன் வாழ்க்கையில் இருந்த பெண், பாலியல் கொடுமைக்கு உள்ளானதாக கூறுவதை ஏற்க முடியாது என தீர்ப்பளித்தது.


திருமணம் செய்வதாக உறுதி அளித்து, 16 ஆண்டு காலம் பலாத்காரம் செய்தார் என்ற குற்றச்சாட்டை நம்புவது கடினம். திருமண வாக்குறுதியை நிறைவேற்றுவார் எனக் கருதி, மீண்டும் மீண்டும் பாலியல் உறவுக்கு அந்த பெண் சம்மதித்ததாக கூறுவது ஜீரணிக்க முடியாதது் சாத்தியமற்றது.

இருவருமே இத்தனை ஆண்டுகள் தங்கள் உறவை தொடர்ந்த நிலையில், அதை வலுக்கட்டாய உறவு என கூற எந்தவித ஆதாரமும் இல்லை. புகார் கூறும் பெண், நன்கு படித்தவர் நல்ல நிலையில் இருப்பவர். அவருக்கு இத்தனை ஆண்டுகள் எதுவும் தெரியாமல் போக வாய்ப்பு இல்லை.

பல இடங்களுக்கு பணி மாறுதலான போதும், இருவரும் பரஸ்பரம் அடுத்தவர் வீடுகளுக்கு சுமுகமாக சென்று நெருக்கமான உறவை பேணி வந்துள்ளனர். லிவ் இன் உறவை துவங்கியபோது, திருமணம் செய்வதாக வாக்குறுதி அளித்தார் என்பதற்கான ஆதாரமும் இல்லை. புகார் தெரிவித்த பெண் கூறும் நிகழ்வுகள் முரணாக உள்ளன. உண்மையிலேயே பலாத்காரம் செய்யப்பட்டிருந்தால், இத்தனை ஆண்டுகள் அவர் எப்படி அமைதியாக இருந்தார்? லிவ் இன் உறவு கசந்ததால், பாலியல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

எனவே, ஆணுக்கு எதிராக பலாத்கார குற்ற நடவடிக்கையை எடுக்க உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. அவர் மீதான பலாத்கார வழக்கை தொடருவது நியாயமற்றது் சட்ட நடைமுறையை துஷ்பிரயோகம் செய்வதற்கு சமம்.

# ரஷ்யப் புரட்சியில் பெண்களும் லெனின் எனும் நாயகனும்!






குடும்பம் என்கிற கட்டமைப்பு, அதிகாரத்திற்கு அடிபணியும் பண்பை வளர்க்கிறது. திருமணம் என்பது இரு நபர்களின் கூட்டுறவாக காண்பிக்கப்பட்ட போதிலும், நடைமுறையில் ஆண் மட்டும் குடும்பத்தில் தலைவனாக அடையாளப்படுத்தப்படுகிறான்.

அவனின் பெண் துணையும் குழந்தைகளும் பொருளாதார ரீதியாக அவனை சார்ந்திருக்கும் நிலையில் உள்ளனர். பெண்கள் சம்பாதித்தாலும்கூட அவர்களின் தொழில்கள், மேலதிக வருமானம் தரக்கூடியவையாக மட்டும் பார்க்கப்படுகின்றன. பெண்களின் பிரதான தொழில் வீட்டையும் குழந்தைகளையும் பராமரிப்பதே என்று இன்றளவிலும் சமூகத்தில் பரவலாக சொல்லப்படும் கருத்தியலாக இருக்கிறது.

1973 இல் பெண்ணியமும் சமவுடைமையும் என்ற கட்டுரைத் தொகுப்பில் டயான் பீலி **(Dianne Feely)**, அரசாங்க உதவித்தொகைகளை **( State benefits)** எதிர்பார்த்து இருக்கும் குடும்பங்களை, சமூகம் ‘ஒட்டுண்ணிகள்’ எனவும் மற்றவர்களின் உழைப்பை உறிஞ்சும் சோம்பேறிகளாக தூற்றப்படுகின்றனர் எனவும் குறிப்பிடுகிறார்.


சமூகமானது, சிறுவயது முதலே தன் சமூக அங்கத்தவர்களை பராமரிக்கும் பொறுப்பை தன்னகத்தே கொண்டிருக்குமாயின், தனிக்குடும்பங்கள் மீது தற்போது உள்ள பொருளாதாரச் சுமை இருக்காது. குழந்தைப்பருவம் முதல் மனிதர்களை பராமரிக்கும் பொறுப்பை சமூகம் ஏற்றுக் கொள்ளுமாயின் சமூக மற்றும் வர்க்க வேறுபாடுகள் நம் சமூகத்தில் நிலவியது. குடும்பம் என்ற அலகை கடுமையாக விமர்சித்த டயன், இளைஞர்களும் பெற்றோரும் குடும்பம் என்ற கட்டமைப்பால் பாதிக்கப்பட்டவர்கள் என்கிறார்.

அதிலும் குறிப்பாக குழந்தைகளுக்கான பொறுப்புக்களை முழுமையாக ஏற்றுக் கொள்வது தாய்மார்களே. அன்றைய காலகட்டத்திலிருந்து பெருமளவு நாம் மாறி விடவில்லை. இன்றும் கூட குழந்தைகள் நோய்வாய்ப்படும் போது, தாய்மார்களே அருகில் இருந்து கவனித்துக் கொள்கின்றனர். வேலைக்கு போகும் பெண்கள்கூட விடுப்பு எடுத்துக் கொண்டோ அல்லது பணிகளை சீக்கிரமாக முடித்துக் கொண்டோ குழந்தைகளை கவனித்துக் கொள்கின்றனர். ஆண்கள் ஆங்காங்கே குழந்தை பராமரிப்பு வேலைகளை செய்தாலும், பெரும்பாலும் பெண்களே குழந்தைகள் உடல்நலம் குன்றும்போது முதன்மையாக செயற்படுகின்றனர். குடும்பம் என்கிற கட்டமைப்பு வழக்கொழிந்து வேறு சமூக அமைப்புக்கள் தோன்றும் பட்சத்தில், பொருளாதார மற்றும் சட்ட ரீதியான பிணைப்புகள் அழிந்து விடும். ஆனால் மக்கள் தொடர்ந்து கூட்டாகவோ இணையர்களாகவோ சேர்ந்து வாழ்வார்கள். ஆனால் அவர்கள் வெறுமனே திருமண சான்றிதழுக்காகவும் பொருளாதாரத் தேவைகளுக்காகவும் வாழப்போவதில்லை.

டயன், 1917 இல் ரஷ்யப் புரட்சியின் லெனின் ஆட்சியில் பெண்களுக்கு கிடைத்த அரசியல் மற்றும் சட்ட உரிமைகள் பற்றி விதந்துரைத்துள்ளார். பிரெஞ்சுப் புரட்சியும் அமெரிக்க விடுதலைப் போரும் தொழிலாளி வர்க்க சித்தாந்தமான மார்க்சியத்தின் தோற்றமும் ஒரு பொற்காலத்தை உருவாக்கியது என்றே கூறலாம். ஜெர்மன் தத்துவம், பிரெஞ்சு சோஷலிசம், பிரிட்டிஷ் பொருளாதாரம் என்கிற மூன்று உள்ளடக்கக் கூறுகளும் கொண்ட மார்க்சியம், தொழிலாளர் வர்க்க உணர்வை ஊட்டியது. 1848ல் மார்க்ஸ் - எங்கெல்ஸ் எழுதி வெளியான கம்யூனிஸ்ட் அறிக்கை ஒரு மைல்கல். இவை எல்லாம் உருவாக்கிய பின்புலத்தில்தான் ரஷ்யப் புரட்சி நடந்தது.

1917 பிப்ரவரியில் நிகழ்ந்த ரஷ்யப் புரட்சியில் பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த பெண்கள் முன்னணியில் நின்று போராடியது, அரசியலில் பெண்கள் பங்கேற்பு பற்றிய மாற்று பார்வைக்கும் சிந்தனைக்கும் வழிவகுத்தது.

நகரங்கள், கிராமங்களில் இருந்தும் படித்த பெண்களும், விவசாயப் பெண்களும், பெண் தொழிலாளிகளும் தெருவிலிறங்கி கொடுங்கோலன் ஜார் மன்னனின் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரப் போராடினர். கிராமங்களில் பெண்கள், பல நூற்றாண்டுகளாக அக்கிரமம் செய்த நிலப்பிரபுக்களை ஓட ஓட விரட்டியடித்தனர். பெண்கள் செங்கொடியையும் கம்யூனிசத்தையும் தூக்கிப் பிடித்தனர் என வரலாற்று பதிவுகள் கூறுகின்றன. புரட்சிக்குப் பின்னர் ஆண்களுக்கு சமமாக அனைத்து



துறைகளில் பெண்களும் சாதிக்க முடியும் என்பதையும் சோவியத் ஒன்றியம் நிரூபித்தது.

லெனின், மக்களிடம் தகித்துக் கொண்டிருந்த புரட்சிகர உணர்வுகளை சரியாக அடையாளம் கண்டு, பக்குவப்படுத்தி, முறைப்படுத்தி, தொழிலாளி வர்க்கப் புரட்சியாய், மார்க்சிய வழியில் முன்னெடுத்தார். ரஷ்யாவில் உருவான சோஷியல் ஜனநாயக கட்சியில், கொள்கை ரீதியில் ஏற்பட்ட பிளவு, மென்செவிக் (சிறுபான்மை), போல்செவிக் (பெரும்பான்மை) எனும் இருபிரிவினரை ஏற்படுத்தியது. போல்செவிக் கட்சியினர் மார்க்ஸிய கோட்பாடுகளின் அடிப்படையில் முதலாளித்துவ ஜனநாயகத்தை தீவிரமாக எதிர்த்தனர். விவசாயிகள், தொழிலாளர்கள் மத்தியில் பிரச்சாரத்தை மேற்கொண்டு, வறிய விவசாயிகளும், தொழிலாளர்களும் சேர்ந்து அமைக்கும் பொதுமக்கள் குடியரசே அவசியம் எனக் கூறி அவர்களைத் தம் வசப்படுத்தினர். அரசு சிதறும் பட்சத்தில் அதனைக் கைப்பற்றும் வகையில் சூழ்நிலைகள் அமையப்பெற்றன. இதனால் ரஷ்யாவின் சூழ்நிலைகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி, தொழிலாளர் அரசாங்கம் ஒன்றினை அவர்களால் உருவாக்க முடிந்தது. புரட்சியை ஏற்படுத்தக்கூடிய ஓர் பேரியக்கமாக போல்செவிக் கட்சியை மாற்றியமைத்தவர் அதன் தலைவர் லெனின் ஆவார். இது ரஷ்ய கம்யூனிச கட்சியாக பெயர் மாற்றம் பெறுகிறது.

ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியால் குறுகிய காலத்தில் ரஷ்யாவில் எழுத்தறிவின்மையையும் வறுமையையும் ஒழிக்க முடிந்தது. ரஷ்யாவின் பொருளாதாரமும் வேளாண்மையும் உன்னதமான வளர்ச்சியைப் பெற்றன. வாக்குரிமை தொடங்கி ஊதியம் வரை, பெண்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட்டன. தொழிற்சாலைகளும் வங்கிகளும் தேசியமயமாக்கப்பட்டன. நிலப் பிரபுக்கள், மத நிறுவனங்கள் போன்றோரின் நிலங்களைக் கைப்பற்றி, விவசாயிகளுக்கு வழங்கும் வகையில், ‘அனைத்து நிலங்களும் அரசுக்கே சொந்தம்’ எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ‘தொழிலாளர்கள், விவசாயிகள் அரசாங்கமாக லெனின் தலைமையில் அமைச்சரவை அமைக்கப்படுகிறது’ என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்ததாக 8 மணி நேர வேலைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அடுத்த ஓராண்டு காலத்துக்குள் பெண்கள் மற்றும் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக வரலாற்றுப் புகழ்பெற்ற அரசமைப்புச் சட்டம் உள்ளிட்ட பல சட்டங்கள் ரஷ்யாவில் நிறைவேற்றப்பட்டன. 18 வயது நிரம்பிய, வெளியில் வேலை செய்து அல்லது தனது வீட்டு வேலைகளைச் செய்து உழைத்து வாழ்கிற ஆண், பெண் அனைவருக்கும் வாக்குரிமையும் தேர்ந்தெடுக்கப்படும் உரிமையும் அளிக்கப்பட்டது.

ஆண் - பெண் வேறுபாடு இல்லாமல் சம வேலைக்குச் சம ஊதியம், வேலை பெறும் உரிமை உள்ளிட்ட ஆண் -பெண் சமத்துவம் உறுதி செய்யப்பட்டது. கருவுற்ற பெண் தொழிலாளர்களுக்கு மகப் பேறுக்கு முன்னர் இரு மாதமும், பின் இரு மாதமும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை, குழந்தைப் பிறப்புக்கு முன்னும், பின்னும் தனிச் சிறப்பான பராமரிப்புகள், வேலையின்போதும் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான இடைவேளைகள், பணியாற்றுமிடத்தில் ஓய்வறைகள், பண உதவிகள் உள்ளிட்ட உரிமைகள் சட்டமாக்கப்பட்டன.

திருமணம் - விவாகரத்து போன்றவற்றிலிருந்து மதம் விலக்கப்பட்டது. இருதரப்பும் விவாகரத்துக்கு உடன்பாட்டால், உடனடியாக விவாகரத்து வழங்கப்பட்டது. ஒருவர் மட்டும் விவாகரத்து கோரி நின்றால், இரண்டு மாதங்கள் காத்திருப்பு காலமாக இருந்தது. திருமணமும் விவாகரத்தும் தனிப்பட்ட விவகாரங்களாக மாறின.

கருக்கலைப்பு தண்டனைக்கு உரிய குற்றம் என்கிற முந்தைய சட்டம் களையப்பட்டு, கருக்கலைப்பு சட்டபூர்வமானது. அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பான கருக்கலைப்புக்கான வசதிகள் தொடங்கப்பட்டன.

(7ஆம் பக்கம் பாரக்க...)

# உங்களை மீட்க வருகிறோம் அதிபர் டிரம்ப் கொடுத்த தகவல்





நாங்கள் உங்களை மீட்பதற்காக வருகிறோம்' என்று விண்வெளியில் இருந்து திரும்ப முடியாமல் தவித்து வரும் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோருக்கு அதிபர் டிரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

விண்வெளிக்கு சென்று தங்கி ஆய்வு செய்ய நாசா விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸும், வில்மோரும் கடந்த ஆண்டு ஜுன் 5ம் தேதியன்று போயிங்கின் ஸ்டார்லைனரில் 10 நாள் பயணமாக சென்றனர். ஆனால்,

இருவரும்9 மாதங்களாக விண்வெளி நிலையத்திலிருந்து திரும்ப இயலாமல் தவித்து வருகின்றனர்.

இதனிடையே, அரசியல் காரணங்களுக்காக, முந்தைய பைடனின் அரசால், சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகியோர் விண்வெளியிலேயே கைவிடப்பட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் குற்றம்சாட்டியிருந்தார். மேலும், அவர்களை பூமிக்கு அழைத்து வருமாறு ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனர் எலான் மஸ்க்கிற்கு கோரிக்கை விடுத்ததாகவும் கூறியிருந்தார்.

போரை நீங்கள் விரும்பினால் அதற்கும் தயார்: அமெரிக்காவின் பரஸ்பர வரிக்கு சீனா பதிலடி

தொடர்ந்து, இதனை ஏற்றுக் கொண்ட எலான் மஸ்க், மார்ச் மாதத்தில் ஸ்பேஸ்எக்ஸின் க்ரூ-10 விண்கலத்தில் திரும்ப உள்ளதாக கூறினார்.

இந்த நிலையில், வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோருக்கு ஆறுதலாக அதிபர் டிரம்ப் பேசியுள்ளார்.

அவர் பேசியதாவது: 'நாங்கள் உங்கள் மீது அன்பு வைத்துள்ளோம். நாங்கள் உங்களை மீட்பதற்காக வருகிறோம். உங்களை அழைத்து வரும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை. மிகவும் திறமையற்ற அதிபராக பைடன் இருந்துள்ளார். அவர் இதனை அனுமதித்திருக்கலாம். ஆனால், இந்த அதிபர் அதனை நடக்க விடமாட்டேன், எனக் கூறினார்.

அப்போது, சுனிதா வில்லியம்ஸ் குறித்து பேசிய அதிபர் டிரம்ப், 'அதிக அடர்த்தியான தலைமுடியுடன் அந்தப் பெண்ணை பார்க்கிறேன். அவரது தலைமுடியை வைத்து எந்த நகைச்சுவையும், விளையாட்டும் இல்லை,' எனக் கூறியிருந்தார். (ஐ)



## பயங்கரவாதி தஹாவூர் ராணாவின் கடைசி முயற்சியையும் சுக்குநூறாக்கியது அமெரிக்கா கோர்ட்!

*இந்தியாவுக்கு நாடு கடத்தலை நிறுத்த கோரி பயங்கரவாதி தஹாவூர் ராணா தாக்கல் செய்த அவசர மனுவை அமெரிக்க உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.*

*மஹாராஷ்டிர மாநிலம் மும்பையில் 2008ல் நடந்த பயங்கரவாத தாக்குதலின் மூளையாக செயல்பட்டவன் லஷ்கர் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய தஹாவூர் ராணா. நம் அண்டை நாடான பாகிஸ்தானை பூர்வீகமாக உடைய இவன், தற்போது அமெரிக்க சிறையில் அடைக்கப்பட்டு உள்ளான்.*

*இவனை இந்தியாவுக்கு நாடு கடத்துவது தொடர்பான வழக்கை விசாரித்த அமெரிக்க உச்ச நீதிமன்றம், கடந்த ஜனவரியில் சீராய்வு மனுவை தள்ளுபடி செய்தது. இதற்கிடையே, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பை, பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து பேசினார். அப்போது, ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த உத்தரவிட்டுள்ளதாக டிரம்ப் தெரிவித்தார்.*

*இதையடுத்து, எந்த நேரத்திலும் அவன் நாடு கடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தன் கடைசி வாய்ப்பாக, இந்தியாவுக்கு நாடு கடத்தும் உத்தரவுக்கு உடனடியாக தடைவிதிக்கக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தான். 'இந்தியாவில் தன்னை சித்ரவதை செய்வர் என்பதால், நாடு கடத்தக்கூடாது' என, மனுவில் அவன் கூறியிருந்தான்.*

*தஹாவூர் ராணா, தன் கடைசி வாய்ப்பாக அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதன் மூலம் தஹாவூர் ராணாவின் கடைசி முயற்சியையும் நீதிமன்றம் சுக்குநூறாக்கியது. விரைவில் தஹாவூர் ராணா இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவான் என்பது உறுதியாகி உள்ளது. (ஐ)*

# இஸ்ரேலில் மாயமான 10 இந்தியர்கள் பத்திரமாக மீட்பு



இஸ்ரேலில் காணாமல் போன இந்திய கட்டுமான தொழிலாளர்கள் 10 பேர் மீட்கப்பட்டுள்ளதாக இந்திய தூதகரம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு எதிரான போர் தொடங்கிய பிறகு, பாலஸ்தீன கட்டுமானத் தொழிலாளர்கள் இஸ்ரேலுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டது. இதனால், ஏற்படும் கட்டுமான தொழிலாளர்களின் பற்றாக்குறையைப் போக்குவதற்காக, கடந்த ஆண்டு இந்தியாவில் இருந்து 16 ஆயிரம் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டனர்.

அப்படி வந்த இந்திய தொழிலாளர்களில் 10 பேர் திடீரென மாயமாகினர். இது தொடர்பாக இஸ்ரேல் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். இந்நிலையில், மேற்கு கரை பகுதியில் இருந்து 10 இந்தியர்கள் இஸ்ரேல் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. மேலும், அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று இஸ்ரேல் அதிகாரிகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதாக இந்திய தூதரகம் கூறியுள்ளது.

இது குறித்து இஸ்ரேல் அதிகாரிகள் கூறுகையில், ' வேலை வாங்கித் தருவதாகக் கூறி, அல் ஜாயேம் பகுதியின் மேற்கு கரை கிராமத்திற்கு இந்தியர்களை பாலஸ்தீனர்கள் அழைத்துச் சென்றுள்ளனர். அதன் பிறகு, அவர்களின் பாஸ்போர்ட்டை பறித்து, அதன்மூலம், இஸ்ரேலுக்குள் நுழைய முயற்சித்துள்ளனர்,' எனக் கூறினர். (ஐ)

# மக்கள் மீது குண்டுகளை வீசிய தென்கொரிய போர் விமானம்



தென் கொரியாவில் குடியிருப்புகள் மீது, போர் விமானம் 8 குண்டுகளை வீசியதால் பரபரப்பு ஏற்பட்டது. தவறுதலாக நடந்ததாக தென் கொரிய ராணுவம் மன்னிப்பு கோரியது.

தென் கொரியாவில் குடியிருப்புகள் மீது, போர் விமானம் 8 குண்டுகளை வீசியதால் பரபரப்பு ஏற்பட்டது. குண்டுகள் தாக்கி, பொதுமக்கள் 15 பேர் காயம் அடைந்தனர். போச்சியோனில் வீடுகள் மற்றும் ஒரு தேவாலயம் சேதமடைந்தன. இந்த தாக்குதல் நடந்த பகுதி, தலை நகர் சியோலில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இது குறித்து விமானப்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்த விபத்தால் ஏற்பட்ட சேதத்திற்கு நாங்கள் வருந்துகிறோம். காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டி கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

போர் பயிற்சியின் போது தவறுதலாக குண்டுகள் வீசப்பட்டதாக தென் கொரிய ராணுவம் விளக்கம் அளித்துள்ளது. குண்டு வீச்சு சம்பவத்திற்கு மன்னிப்பு கோரியதோடு அப்பகுதியில் போர் பயிற்சி முழுவதும் ரத்து செய்வதாக அறிவித்துள்ளது. (ஐ)

## கனேமுல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபர்கள் காணொளி அழைப்பு ஊடாக கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் இன்று வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு காணொளி அழைப்பு ஊடாக கனேமுல்ல சஞ்சீவவின் கொலை வழக்கு இன்று விசாரணைக்குட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அயலில் வசிக்கும் குடும்பஸ்தரான 37 வயது நபர் ஒருவர் தனது வீட்டுக்கு அழைத்து மேற்படி பெண்ணை மிரட்டி பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இதனை அவர் வீடியோவாகவும் பதிவு செய்துள்ளார்.

அந்த வீடியோவை வெளியிடுவேன் என மிரட்டி மேற்படி பெண்ணை மீண்டும் பல தடவைகள் அழைத்து அந்த நபர் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இதனால் கர்ப்பமான மேற்படி பெண் குழந்தை ஒன்றையும் பிரசவித்துள்ளார். இதனையடுத்து பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி மேற்படி பெண் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டையடுத்து சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வந்த போதும், இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட குடும்பஸ்தர் தலைமறைவாகியிருந்தார். இந்நிலையில், வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து முள்ளியவளைப் பகுதியில் உள்ள காட்டில் மறைந்திருந்த நிலையில் 37 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில், "கடந்த அரசு பயணித்த தொங்கு பாலத்திலே இந்த அரசும் பயணிக்கின்றது. அதே வழிமுறைகளையே பின்பற்றி வருகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முதன்மைச் செலவை 13 வீதமாக மாற்றியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இவ்வாறான பேச்சுவார்த்தையை நடத்த மாட்டார்கள் என்பது அரசின் நடவடிக்கைகளில் இருந்து நன்றாகத் தெரிகின்றது. இவ்வாறு போனால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இவ்வாறே போனால் மற்றுமொரு கடன் மறுசீரமைப்புக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

குறுகிய காலத்தில் மூன்றாவது முறையாக மக்கள் அபிப்பிராயத்தை கேட்கும் தேர்தல் வரப்போகின்றது. இந்தத் தேர்தலுக்கு மத்தியில் அரச ஊழியர்களால் சரியான தீர்மானத்தை எடுக்க முடியும்.

ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் பாதுகாக்கும். உழைக்கும் மக்கள் இல்லாமல் ஒரு நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. அவர்களை மறந்து நடக்க முடியாது." - என்றார்.

## ஒரு வயது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரம்பிய குழியில் வீழ்ந்து குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வைரம்கட்டுவ பகுதியில் வசிக்கும் ஒரு வயதுடைய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராய்ச்சிக்கட்டுவ பொலிஸார் மேற கொண்டு வருகின்றனர்.

## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களும் இருக்க வேண்டும்.

இதன்மூலம் தமிழ் மக்கள் உரிமையோடு சேர்ந்து பயணிக்கக் கூடியவர்களாகத் தமிழ் மக்கள் இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2015 ஆம் ஆண்டு அடைந்த தோல்விக்குப் பின்னர் துவண்டு விடவில்லை. மீண்டும் 2019 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களினூடாக எழுச்சி பெற்றது.

இப்போது எமக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ஷ கட்சியைப் பொறுப்பெடுத்துள்ளார். அவரது தலைமையின் கீழ் இளைய தலைமையினர் நாடளாவிய ரீதியில் தொடர்ந்தும் பயணிக்கக் காத்திருக்கின்றனர்.

இது ஒரு தூரநோக்கு அரசியல் பயணம். எடுத்த மாத்திரத்திலேயே நாட்டின் அரசியல் போக்கை மாற்றிவிட முடியும் எனச் சொல்லவில்லை. நீண்ட கால அடிப்படையில், அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் எமது பயணம் அமையும்.

இம்முறை நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 339 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெறுவது உறுதியாகியிருக்கும் சூழலில், பெரும்பான்மையான இடங்களில் மொட்டுச் சின்னத்திலும், சில இடங்களில் பங்காளிக் கட்சிகளுட னும் சேர்ந்து பயணிக்கக் கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன.

இம்முறை பாரிய வெற்றியைக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை இல்லாவிட்டாலும், குறிப்பிட்ட தொகுதிகளில் எம்மால் மாற்றங்களைக் கொண்ண்டுவர முடியும்.

சமகால அரசின் வாக்குறுதிகள் மற்றும் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்துள்ள மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயற்பாடுகளை ஏற்றுக்கொண்டு அவர்களைத் தெரிவு செய்யக்கூடிய சூழல் களத்தில் காணப்படுகின்றது." - என்றார்.

## கல்வித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2026 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் கல்விச் சீர்திருத்தம், பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துதல், மனிதவள அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, புதிய கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து பொது மக்களுக்கு தெளிவூட்டுதல், மதிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பிரதமர் விளக்கினார்.

இது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளுக்காக உபகுழுக்களை நியமிப்பதற்கும் இதன்போது இணக்கம் காணப்பட்டது.

பாடசாலைகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வைக் குறைக்கவும், புதிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலையையும் பற்றி பௌதீக ரீதியாக ஆய்வு செய்து, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்யவும், தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள நிர்மாணப் பணிகள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கவும், பாடசாலைகளில் உள்ள பாதுகாப்பற்ற இடங்களைக் கண்டறிந்து அவற்றை உடனடியாக புனரமைத்து அபிவிருத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், ஆசிரியர் சமநிலையைப் பேணும் வகையில் இடமாற்றங்களை மேற்கொள்ளுதல், அதிபர் வெற்றிடங்கள் மற்றும் பதில் கடமை, மாகாண பாடசாலைகள் மற்றும் தேசிய பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள், கல்வி நிர்வாகத்தில் நிலவும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதி கல்வி அமைச்சர் மதுர செனவிரத்ன மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## மேலதிக வகுப்புகளுக்குத் தடை

கொழும்பு, மார்ச் 07

2024 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை இலக்காககே கொண்ட அனைத்து கற்றல் செயற்பாடுகளும் எதிர்வரும் 11 ஆம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்படவுள்ளன.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, 2024 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி பட்டறை என்பவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரணத் தர ப்பரீட்சை எதிர்வரும் 17 ஆரம்பமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## மகளிர் தினத்தை முன்னிட்டு அரசாங்கத்தின் தீர்மானம்!

இலங்கை போக்குவரத்து சபைக்கும் ரயில் சேவைக்கும் பெண்களை பணியமர்த்துவதற்கு கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். இன்று நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோது அவர் இந்தக் கருத்துகளை வெளிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாளை கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை போக்குவரத்து சபைக்கும், ரயில் சேவைக்கும் பெண்களை பணியமர்த்துவதற்கு எமது அமைச்சரவை அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர். பேருந்து ஓட்டுநர்களாக, ரயில் சாரதிகளாக, பாதுகாவலர்களாக பெண்களை இன்னும் சில நாட்களில் பார்க்க முடியும். நாளைய மகளிர் தினத்திற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதேபோல், பாடசாலை பேருந்துகளை பெண்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கனவும் உள்ளது" என்று தெரிவித்தார்.

# ரஷ்யப் புரட்சியில் பெண்களும்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி....)

மேலும் 'யாருக்கும் காயம் ஏற்படுத்தாமலும், யாருடைய நலன்களையும் ஆக்கிரமிக்காமலும் உள்ள உடலுறவு விஷயத்தில் அரசோ, சமுதாயமோ தலையிடக் கூடாது' என்பது அரசின் கொள்கையானது.

லெனின் அரசு, சலவை நிலையங்களையும் பொதுச் சமையலறைகளும் **(Communal Laundries and Kitchens)** நிறுவியது. அத்துடன் குழந்தை காப்பகங்கள் அமைத்துக் கொள்வது முதன்மைப் பணிகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. டயனின், 'பெண்களும் ரஷ்ய புரட்சியும்' என்கிற மற்றுமொரு கட்டுரையில், 1920களில் இது சம்பந்தமாக மேற் கொள்ளபட்ட உணவு தயாரிப்பு பற்றிய ஆய்வொன்றைக் குறிப்பிடுகிறார். ரஷ்யாவில் உணவு தயாரிப்புக்கு 36 மில்லியன் மணித்தியாலங்கள் தேவைப்படுகிறது எனக் கூறிய அந்த ஆய்வு, பொது சமையலறைகள் மூலம் பெறப்படும் தொழில்மயமாக்கம், உணவு தயாரிப்புக்கு வெறும் 6 மில்லியன் மணித்தியாலங்களையே எடுத்துக் கொள்கிறது எனக் கூறுகிறது.

1919 இல் மொஸ்கோவில் பெண் தொழிலாளர்கள் காங்கிரஸ் கருத்தரங்கு உரையில், "பெண்கள் முழு உரிமைகளை பெற்றாலும்கூட, வீட்டு வேலை என்பது அவர்களிடம் விடப்பட்டுள்ளதால் அவர்கள் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ளார்கள் என்பதே உண்மை. பெரும்பாலான சமயங்களில் பெண்களின் செய்யும் வீட்டு வேலை என்பது பயனற்றது, கடினமானது, காட்டுமிராண்டித்தனமானது! அது எந்த வகையிலும் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழி செய்யப்போவதில்லை" என லெனின் கூறிய வார்த்தைகள் பிரபல்யமானவை.

பெண்விடுதலை பற்றி லெனின் (டுநளைை ழெ றுழஅநெ நுஅயெஉiயவழைெ) என்கிற நூலில், சோவியத் குடியரசில் பெண் தொழிலாளர்கள் இயக்கத்தின் பணிகள் என்ற தலைப்பில் மேற்கூறிய முழு உரையும் பதிவாகியுள்ளது. 1918 இல் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு உரையில், 'வெறுமனே சட்டங்களால் மட்டும் பெண் விடுதலையை பெற்று விட முடியாது. நகரங்கள் கடந்து கிராமங்கள் தோறும் அரங்கேறும் மதரீதியான பாரபட்சங்களை, பெண் ஒடுக்குமுறையை, விழிப்புணர்வூட்டும் பிரச்சாரங்களும் கல்வியும் மூலமே களையலாம்' என துல்லியமாகக் கணித்து கூறினார். பல இடங்களில் லெனின் உரைகளும் பெரியாரின் பெண் விடுதலை எழுத்துகளும் ஒத்துப் போகின்றன என்பது நம் அவதானிப்பு.

முதலாளித்துவமும் பெண்களின் உழைப்பும் என்ற தலைப்பில் 1913 இல் ஆற்றிய லெனினின் உரை புரட்சிகரமானது. பெண்களின் உழைப்புச் சுரண்டலின் வடிவம் மட்டும் மாறுகிறது, ஆனால் சுரண்டல் என்பது இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது. அடிமைத்தனம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் எல்லாமே இவ்விடயத்தில் ஒரே மாதிரியான தன்மைகளை கொண்டுள்ளன என்பது லெனின் வாதம்.

"நாம் அதிகாரத்துக்கு வந்த முதல் ஓர் ஆண்டுக்குள் செய்த சாதனையில் நூற்றில் ஒரு பங்கைக் கூட, உலகில் பல பத்தாண்டுகளில் எவரும் செய்யவில்லை. இந்தச் சாதனை பற்றிப் பெருமைகொள்ள நமக்கு உரிமை உள்ளது. பெண்களைத் தாழ்வாக நடத்தும் இழிவான சட்டங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றை நொறுக்கித் தள்ளிவிட்டோம். ஆனால், கட்டிடம் கட்டுவதற்காக மனையைச் சுத்தப்படுத்தியிருக்கிறோமே தவிர, இன்னும் கட்டிடத்தைக் கட்டிவிடவில்லை என்பதும் நமக்குத் தெளிவாகவே தெரிகிறது!" எனக் கூறிய லெனின், "உண்மையான பெண் விடுதலையிலிருந்தே உண்மையான கம்யூனிஸம் தொடங்குகிறது!" என உரக்கவும் சொன்னார்.

ஒன்பது உரைகளை உள்ளடக்கிய, 'பெண் விடுதலை பற்றி லெனின்' என்ற நூல் **( Lenin on Women Emancipation)** தமிழில், 'ஒரு கோப்பை தண்ணீர் தத்துவமும் காதலற்ற முத்தங்களும்' என்ற பதிப்பில், கிளாரா ஜெட்கினின் கட்டுரைகளையும் கொண்ட தொகுப்பாக வெளியாகி இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி6.07.03.2025 இல் வெளியிடப்பெற்றது.